**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.No.54/2024**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கௌரி | க/பெ.: | லேட்.குழலரசன் |
| கிராமம்: | கொத்தமங்கலம் | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | வீட்டு குடித்தனம் |
| வயது: | 30 | முகவரி: | கொத்தமங்கலம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 31.10.2025.

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். நான் 2 முதல் 5 மனுதாரர்களுக்கு ஆதரவாக எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 10.09.2024 | முதல் தகவல் அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.2 | 23.05.2023 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் RC Book | நகல் |
| ம.சா.ஆ.3 | 31.03.2024 முதல் 30.03.2025 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி | நகல் |
| ம.சா.ஆ.4 | 15.02.2027 | 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் | நகல் |
| ம.சா.ஆ.5 | -- | எனது பெயரில் உள்ள ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | நகல் |
| ம.சா.ஆ.6 | -- | 2ம் மனுதாரர் பெயரில் உள்ள ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.7 | -- | 3ம் மனுதாரரின் பிறப்புச்சான்றிதழ் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | நகல் |
| ம.சா.ஆ.8 | -- | 4ம் மனுதாரர் பெயரில் உள்ள ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | நகல் |
| ம.சா.ஆ.9 | -- | 5ம் மனுதாரர் பெயரில் உள்ள ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) | நகல் |
| ம.சா.ஆ.10 | 10.09.2024 | இறந்து போன குழலரசனின் இறப்புச்சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.11 | 11.09.2024 | இறந்து போன எனது கணவரின் பிரேத பரிசோதனை அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.12 | 09.10.2024 | இறந்து போன எனது கணவரின் வாரிசுச்சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.13 | 21.09.2024 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.14 | 18.10.2024 | என் கணவரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.15 | 10.09.2024 | குற்ற இறுதி அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.16 | -- | எனது கணவர் திருத்துறைப்பூண்டி வட்டார அண்ணல் காந்தியடிகள் மோட்டார் வாகனங்கள் பழுது பார்ப்போர் நல சங்க உறுப்பினர் அட்டை | நகல் |
| ம.சா.ஆ.17 | -- | என் கணவர் திருவாரூர் மாவட்ட ஆட்டோ தொழிலாளர் நல சங்க உறுப்பினர் சான்று | நகல் |
| ம.சா.ஆ.18 | -- | என் கணவர் திருத்துறைப்பூண்டியில் சொந்தமாக SPK ஆட்டோ வொர்க்ஸ் கடை வைத்திருந்ததற்கான GPS மூலம் எடுக்கப்பட்ட புகைப்படம் | நகல் |
| ம.சா.ஆ.19 | -- | இறந்து போன என் கணவர் தஞ்சாவூரில் உள்ள TVS Sales and Dealer கடையில் Two Wheeler மெக்கானிக்காகவும் பணிபுரிந்த புகைப்படம் | நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.20 | -- | எனது கணவரின் PAN CARD அட்டை | நகல் |
| ம.சா.ஆ.21 | -- | இறந்து போன என் கணவர் டூ வீலர் மெக்கானிக் பழுது பார்ப்போர் கடை வைப்பதற்கான வாடகை ஒப்பந்த பத்திரம் மற்றும் மின்சார கட்டண அட்டை. | நகல் |
| ம.சா.ஆ.22 | -- | இறந்து போன எனது கணவரின் பாஸ்போர்ட் | அசல் |
| ம.சா.ஆ.23 | -- | என் கணவரின் பிடரல் பேங்க் ஸ்டேட்மெண்ட்ஸ் ஆப் அக்கௌண்ட் | நகல் |
| ம.சா.ஆ.24 | -- | இறந்து போன எனது கணவரின் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது). 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனைக்கு உட்பட்டு ம.சா.ஆ.16 முதல் 24 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. | நகல் |

மனுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

இந்த விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. சொல்லி தான் தெரியும். இந்த விபத்து குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு அதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. SPK ஆட்டோ வொர்க்ஸ் என்ற கடை நகராட்சி எல்லைக்கு உட்பட்டு அமைந்துள்ளதா அல்லது ஊராட்சிமன்ற எல்லைக்கு உட்பட்டு அமைந்துள்ளதா என்றால் திருத்துறைப்பூண்டி சிங்களாந்தி என்ற இடத்தில் உள்ளது. எனது கணவர் நடத்தி வந்த தொழில் சார்ந்த அரசுக்கு செலுத்தப்பட்ட பல்வகை ரசீது இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக ஆட்டோ வொர்க்ஸ் கடையில் உதிரி பாகங்கள் விற்பனை எப்படி செய்வார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். எனது கணவர் உதிரி பாகங்கள் விற்பனை நிலையத்தில் விற்பனை

செய்யப்பட்ட பொருள்களின் ரசீது அடிக்கட்டை எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பழுது நீக்கும் நிலையத்திற்கு வரும் வாகனத்தை பொறுத்து எந்த மாதிரி நடைமுறைகள் கடைபிடிப்பார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. SPK பழுது நீக்கும் கடையினுடைய வொர்க் சீட் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தஞ்சாவூரில் உள்ள TVS Sales and Dealers கடையில் மெக்கானிக்காக எந்த நிறுவனத்தில், எந்த வருடத்தில் பணிபுரிந்தார் என்ற விவரம் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான்கு, ஐந்து மெக்கானிக்குகளை வைத்து வேலை செய்து சம்பளம் கொடுத்தது தொடர்பாக எந்த கணக்குப்புத்தகமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பழுது நீக்கும் கடைக்கு வரும் வாகனங்களை சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தக்கூடாது என்ற விவரம் தெரியும். என் கணவர் ஓட்டிய வாகனத்தை சொந்த பயன்பாட்டிற்கு எடுத்து பயன்படுத்தியது சட்டத்திற்கு புறம்பானது என்று சொன்னால் சரியல்ல. எனது வீட்டுக்காரரின் ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்து செல்லவில்லை என்றால் சரியல்ல. அவர் தலைக்கவசம் அணிந்து சென்றார். விபத்து சமயத்தில் தலைக்கவசம் நொறுங்கிவிட்டது. அதுகுறித்து சடலக்கூறாய்வில் எந்த வித குறிப்புகளும் இல்லை. விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. இறந்த எனது கணவர் வாகனத்தை ஓட்டத்தெரியாமல் ஓட்டி எதிரே வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு முழுக்க முழுக்க என்னுடைய கணவரின் கவனக்குறைவு தான் காரணம்

என்பதால் நாங்கள் எந்த வித இழப்பீடு பெற தகுதியற்றவர்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் எனது கணவர் எந்த வித வருமானமும் ஈட்டவில்லை. நான் அதிக இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக வருமானத்தை மிகையிட்டு கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த 3ம் மனுதாரர் இறந்த என் கணவருக்கு சட்டப்படியான வாரிசு இல்லை என்பதாலும், அவர் எப்போது எனது கணவரின் வருமானத்தை நம்பி இருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் ஓட்டிச் சென்ற வாகனத்தின் உரிமையாளரையும், அதன் காப்பீட்டு நிறுவனத்தையும் தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு பிழையுடையது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகமானது. அது எங்களுக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.16 முதல் 23 வரையிலான ஆவணங்கள் இழப்பீடு அதிகம் பெற வேண்டும் என்பதற்காக எங்களால் உற்பத்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளது போல எந்த வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும், இந்த விபத்திற்கு என்னுடைய கணவரின் கவனக்குறைவு தான் காரணம் என்றும், அதனால் இந்த 1,2 எதிர்மனுதாரர்கள் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகமானது என்றும், அது எங்களுக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றும், இந்த எதிர்மனுதாரர்களை பொறுத்து அசல் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.